<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE</u>

<u>(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.</u>

<u>DEPOSITION OF WITNESS</u>

OS.NO.76/2017 (OS.NO.75/2014)

P.W.1-VISWANATHAN, S/O.SUBRAMANI

DATE:01.12.2022

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 5, 7 மற்றும் 8 தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணப்படி அந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அ அட்டவணை சொத்து என் அப்பா சுப்பிரமணிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைக்கு பிறகு என் அப்பாவிற்கு கிடைத்த சொத்து அவரின் தனிப்பட்ட சொத்தாக மாறிவிட்டது என்றால் சரியல்ல. எனக்கும் பாகம் உள்ளது. அந்த சொத்தில் எனக்கு பாகம் உரிமையுள்ளது என்று சொல்வது தவறு என்றாலும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணப்படி என் அப்பாவிற்கு 9 அயிட்ட சொத்துகள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு கிடைத்த 9 அயிட்ட சொத்துக்களில் 6 அயிட்ட சொத்துகளை விற்றுவிட்டார் என்றால் சரிதான். எங்களுடைய கையொப்பம் இல்லாமல் விற்றுவிட்டார். என் அப்பா விற்ற 6 அயிட்ட சொத்துக்களில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எ அட்டவணையில் குறிப்பிடபட்டுள்ள 1, 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்ற நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சேர்த்துள்ளேன். என் அப்பா கிரையம் கொடுத்த கிரைய பத்திரங்களை ரத்து செய்யக்கோரி எந்த பரிகாரமும் இந்த வழக்கில் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் எ அட்டவணை சொத்தில் 2 முதல் 4 அயிட்ட சொத்துகளை விற்றுவிட்டார் என்றாலும் அந்த சொத்துகளை கிரையம் பெற்றவர்களை தான் இந்த வழக்கில் 5 முதல் 8 பிரதிவாதிகளாக சேர்த்துள்னே் என்றால் சரிதான். என் அப்பா விற்ற வா.சா.ஆ.1 ஆவணத்தில் எ அட்டவணையில் குறிப்பிடபட்டுள்ள 1, 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களில் எந்த பாகமும் நான் கோரவில்லை என்றால் சரியல்ல. பாகம் கேட்டுள்ளேன். என் அப்பா விற்ற அந்த 1, 5 மற்றும் 6 அயிட்ட சொத்துக்களில் பாகம் கேட்காமல் மீதியுள்ள 2 முதல் 4 அயிட்ட சொத்துக்களில் பாகம் கேட்டுள்ளது சரியல்ல என்றால் தவறு. என் அப்பா பாகத்திற்கு வந்த 9 அயிட்ட சொத்துக்களில் சர்வே எண்.166ல் ஒரு வீடு உள்ளது என்றால் சரியல்ல. காலியிடம் உள்ளது. அந்த சர்வே எண்.166 எ அட்டவணை சொத்தில் 7வது அயிட்டமாக உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.349/1 என்பது 8 அயிட்டம் என்றாலும் அந்த சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல. சர்வே எண்.349/2 என்பது 4 1/2 சென்ட் கிணறு மற்றும் பம்பு ஷெட் என்றால் சரிதான். அதில் என் அப்பாவிற்கு பொதுவில் 1/4 பாகம் தான் உள்ளது என்றால் சரிதான். மீதி 3 பாகஸ்தர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எ

அட்டவணையில் உள்ள மொத்தம் 9 அயிட்டத்தில் இந்த வழக்கில் 5 அயிட்ட சொத்துகளை மட்டும் தான் எ அட்டவணை சொத்தாக இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தவா பி அட்டவணை சொத்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் வா.சா.ஆ.1 ஆவணப்படி தாவா எ அட்டவணை சொத்தில் 3வது அயிட்ட சொத்தான சர்வே எண்.349/9ல் 17 செண்ட்டில் 2 செண்ட் விற்றது போக மீதி 15 செண்ட் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் 2 செண்ட் விற்றது செல்லாது. தாவா எ அட்டவணை சொத்தில் 2 மற்றும் 4வது அயிட்ட சொத்தில் நான் எந்தவித பாகமும் கோரமுடியாது மற்றும் எனக்கு உரிமையும் கிடையாது என்றாலும் சரியல்ல. தாவா எ அட்டவணை 3வது அயிட்ட சொத்திலும் நான் பாகம் கேட்க எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 முதல் 11ப்படி பிரதிவாதிகள் 5, 7 மற்றும் 8 ஆகியோர்களின் தனிப்பட்ட சொத்தாக மாறிவிட்டது என்றாலும் அந்த சொத்துக்களில் நான் எந்த பாகமும் கோரயியலாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் 5, 7 மற்றும் 8 கிரையம் பெற்ற சொத்துக்களில் கிரைய பத்திரத்தை ரத்து செய்ய எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் அந்த சொத்துக்களை ரத்து செய்வதற்கு கால அவகாசம் முடிந்துவிட்டதால் காலதோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் 5, 7 மற்றும் 8 அவர்கள் கிரையம் பெற்ற கிரைய பத்திரம் செல்லத்தக்கது என்றாலும் அந்த கிரையத்தின் படி அவர்களின் அனுபவத்தில் தான் அந்த சொத்துக்கள் உள்ளது என்றாலும் அந்த சொத்துக்களில் நான் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக கூறுவது ஏற்றுக்கொள்ளயியலாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் 5, 7 மற்றும் 8 ஆகியோர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்பதற்காகவும் அவர்களை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காகவும் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என் தகப்பனார் கிரையம் கொடுத்த சொத்துக்கள் அவருக்கு பாகப்பிரிவினை மூலம் வந்த தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அந்த சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தாவா தள்ளுப்படி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.

P REVATHY

Digitally signed by P REVATHY
Date: 2022.12.01 17:12:07 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(விரைவு நீதிமன்றம்),
வேலூர்.